Third Periodic Test – December 2019

Tamil (SL)

Class: X
Date: 10 -12-2019

Time Allowed : 3 Hrs
Maximum Marks: 80

---

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது:

This question paper is divided into four sections:

| | | |
|---|---|---|
| பிரிவு அ | : படித்தல் (உரைநடைப்பகுதி) | 15 மதிப்பெண்கள் |
| SECTION A | : Reading Comprehension | 15 Marks |
| பிரிவு ஆ | : எழுதுதல் | 14 மதிப்பெண்கள் |
| SECTION B | : Writing | 14 Marks |
| பிரிவு இ | : இலக்கணம் | 15 மதிப்பெண்கள் |
| SECTION C | : Grammar | 15 Marks |
| பிரிவு ஈ | : இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | 36 மதிப்பெண்கள் |
| SECTION D | : Literature / Text Books | 36 Marks |

# பிரிவு - அ

## *படித்தல் - மதிப்பெண் : 15*

**1. பின்வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும் :**

***அ) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :*** ***5***

சிலப்பதிகாரம், புகாரில் நெடுநிலை மாடங்கள் பல இருந்ததையும், அழகான வேலைப்பாடுகளோடு கூடிய சாளரங்கள் மாளிகைகளில் பொருத்தப்பட்டிருந்ததையும், சரக்குகள் நிறைந்த பண்டக சாலைகளையும், மாளிகைகளில் நிலாமுற்றங்கள் அமைக்கப்பட்டிருந்ததையும் குறிப்பிடுகின்றது. மதுரை நகரிலும் மாடங்கள் நிறைந்திருந்தன. “நான்மாடக்கூடல்”, “சேய் மாடக் கூடல்”, “நீள்மாடக்கூடல்”, “நெடுமாடக்கூடல்”, என்ற அடைகளால் பல மாடிகள்

வானோக்கி வளர்ந்த கட்டடப் போக்கினைப் பெற்றிருந்ததை அறியலாம். மதுரையில் நீளமான வாயில் நெடுங்கதவோடு அமைந்திருந்தது. மன்னன் பேரிசைக் கோயிலும் கடவுளர் கோயில்களும் பள்ளிகளும் அங்குச் சிறந்து விளங்கின. வஞ்சியில் சேரன் வேண்மாளுடன் வெள்ளிமாடத்தில் இருந்தானெனச் சிலம்பு கூறுகின்றது. வஞ்சியில் மன்றங்களும் சதுக்கங்களும் நிறைந்திருந்தன என மணிமேகலை கூறுகின்றது.

**வினாக்கள் :**

i. *நெடுநிலை மாடங்கள் அமைந்த இடம்*

அ) வஞ்சி நகரம் ஆ) புகார் நகரம் இ) மதுரை நகரம்
ஈ) காஞ்சி நகரம்

ii. *பண்டக சாலையில் நிறைந்திருந்தவை*

அ) விளையாட்டுப் பொருட்கள் ஆ) மணல்கள்
இ) சரக்குகள் ஈ) கற்கள்

iii. *நிலா முற்றங்கள் எங்கு அமைந்திருந்தன ?*

அ) தெருக்கள் ஆ) ஆறுகள் இ) மாளிகைகள்
ஈ) கடல்கள்

iv. *மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கியவை*

அ) ஆடல் பாடல்கள் ஆ) பட்டிமன்றங்கள்
இ) விழாக்கள் ஈ) கடவுளர் கோயில்களும் பள்ளிகளும்

v. *மன்றங்களும் சதுக்கங்களும் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்*

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) வளையாபதி ஈ) குண்டலகேசி

## *ஆ) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :* *5*

தமிழகம் சங்க காலத்தில் மக்கள்தம் வாழ்வொழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்நிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த ஐந்திணை மக்களுள் ஆயர் தமக்குள் ஒருதலைவனை அமைத்துக் கொண்டு அவனைக் 'கோ' என்னும் பெயரால் அழைத்தனர் என்றும், மருத நில மக்கள் தமக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்தி அவனை 'வேள்' என்னும் பெயரால் அழைத்தனர் என்றும் அறிஞர் கூறுவர். 'கோ' எனத் தலைவனை அழைத்த இடையர்குல மக்கள் நாளடைவில் அவனைக் 'கோன்' என அழைத்தனர். மருத நிலம் கழனிகள் நிறைந்த நிலமாதலால் மற்ற நிலங்களைக் காட்டிலும் உயர்ந்திருந்தது. மருத நிலத்துத் தலைவனே எல்லா மக்களுக்கும் தலைவனாக - அரசனாக விளங்கினான் என்றும் அறிஞர் கூறுவர்.

**வினாக்கள் :**

i. *தமிழர் வாழ்வு ஒழுக்கம் எதன் அடிப்படையில் அமைந்திருந்தது ?*

அ) மூன்று நிலங்கள் ஆ) ஆறு பொழுதுகள்
இ) ஐந்து நிலங்கள் ஈ) ஆண்டுகள்

ii. *ஆயர்குலத் தலைவன் பெயர் என்ன ?*

அ) வஞ்சி ஆ) மாதவன் இ) கோ
ஈ) உயர்ந்தான்

iii. *மருத நில மக்கள் தலைவன் பெயர் என்ன ?*

அ) வேள் ஆ) அதியமான் இ) பாரி
ஈ) முல்லை

iv. *அரசனாக விளங்கியவன்*

அ) முல்லை நிலத் தலைவன்
ஆ) நெய்தல் நிலத் தலைவன்
இ) மருத நிலத் தலைவன்
ஈ) காஞ்சி நிலத் தலைவன்

v. *'கோ' என்னும் பெயர் நாளடைவில் எவ்வாறு மாறியது ?*

அ) வியாசர் ஆ) கோன்
இ) இலவன் ஈ) மாமனிதன்

**2. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து, சுருக்கி எழுதுக : 5**

புறநானூற்றுப் பாடல் ஒன்று காலையில் பாலில் அரிசிப்பொரியைச் சேர்த்து உண்பதாகக் குறிப்பிடுகிறது. இன்று பிரிட்டனிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் மக்கள் காலை உணவில் "கார்ன் ப்ளேக்ஸ்" (மக்காச் சோளம்), "ரைஸ் கிரிஸ்பிஸ்" (அரிசிப் பொரி) ஆகியவற்றைச் சாப்பிடுவதைக் காண்கிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் கண்டு பிடித்த காலைத் தானிய உணவு (breakfast cereal) உலகெங்கிலும் பரவியது எப்படி ? இதுவும் ஆராய்ச்சிக்குரிய பொருள்.

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான கலித்தொகையில் ஒரு அதிசயத் செய்தி வருகிறது. பாலை பாடிய பெருங்கடுங்கோ இயற்றிய பாடலில், ஒரு மரத்தின் கீழ் பொய் சொல்பவன் நின்றால் அந்த மரம் வாடிவிடும் என்று கூறுகிறார். தற்காலத்தில் அமெரிக்காவில் பொய் கண்டு பிடிக்கும் கருவியைப் (Lie detector) பயன்படுத்துகின்றனர். பொய் சொல்பவனின் நாடி, இருதயம், மூளை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கிட்டு அவன் பொய்யன் என்பதைக் கண்டு பிடிக்கின்றனர்.

ஆனால், தமிழனோ அதற்கு ஒரு படி மேலாகச் சென்று ஒரு தாவரம் கூடப் பொய்யைக் கண்டுபிடிக்க உதவும் என்கிறான். ஆனால் அத்தகைய மரம் எது என்று தெரியவில்லை. வள்ளுவர் கூட "மோப்பக் குழையும் அனிச்சம் என்று அனிச்சம்பூ பற்றிக் கூறுகிறார். அதாவது முகர்ந்து பார்த்தாலேயே வாடி விடுமாம் அனிச்சம். தாவரங்களுக்கும் உயிருண்டு, உணர்ச்சியுண்டு என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கண்டு பிடித்தவன் தமிழன்.

விண்வெளியில் ஏராளமான கிரகங்கள் உள்ளன. அவைகளில் பூமியைப் போல காற்றுமண்டலம் இருந்தால்தான் உயிரினங்கள் வாழ முடியும். பூமிக்குமேலே விண்வெளியில் - வளி ( காற்று ) மண்டலம் இல்லை. இதைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். சான்றாக, வெள்ளக்குடி நாகனார் என்ற புறநானூற்றுப் புலவர் (புறம் 35) "வளியிட வழங்கா வானம்" என்று குறிப்பிடுகிறார். குறுங்கோழியூர்க் கிழார் (புறம் 20) "வறி நிலை இல் காயம்" என்றும் வள்ளுவன் (குறள் 245) "வளி வழங்கு பூமி" என்றும் இதையே குறிப்பிடுகின்றனர்.

# பிரிவு - ஆ

## *எழுதுதல் - மதிப்பெண் : 14*

**3. கடிதம் வரைக :** **6**

உன் தாத்தா உன் பிறந்தநாளுக்கு அளித்த பாரதியார் கவிதைகள் புத்தகத்தின் சிறப்பை விளக்கி அந்தப் பரிசிற்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

**அல்லது**

நீ வாழும் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைத்துத்தர அஞ்சலகத் தலைமை மேலாளருக்குக் கடிதம் எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி : தமிழரசன்/கயல்விழி, 25.தமிழீழவன் குடியிருப்பு, பிரபாகரன் நகர், திருநெல்வேலி எனக் கொள்க.)

**4. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக : 8**

அ) முன்னுரை - உழவின் சிறப்பு - உழுவார் உலகத்தார்க்கு ஆணி - உழவின் பழமை - பழங்கால உழவு முறைகள் - அறிவியலால் ஏற்பட்டுள்ள வளர்ச்சி - பசுமைப்புரட்சி - உழவைப் போற்றும் முறை - நம் கடமை - முடிவுரை.

ஆ) முன்னுரை - தகவல் தொடர்புச் சாதனங்கள் - நன்மைகளும் தீமைகளும் - கட்டுப்பாடும், கவனச்சிதைவுகளும் - நல்லதற்கே தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துதல் - வளமான வாழ்வு வாழ்தல் - முடிவுரை.

இ) குறிப்புச்சட்டம் - முன்னுரை - மாற்றுத்திறனாளிகள் - ஊனம் குறையல்ல - மறுவாழ்வு - தடையை வென்றவர்கள் - முடிவுரை.

## பிரிவு - இ

### *இலக்கணம் - மதிப்பெண் : 15*

**5. இலக்கணம்**

**அ) எடுத்துக்காட்டுகள் தருக : 3**

*i. எதிர்மறைத் தொழிற்பெயர்*

அ) காணுதல் ஆ) காணல் இ) காணாமை ஈ) கண்டான்

*ii. செங்காந்தள் என்பது*

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை

*iii. கோட்டையைச் சுற்றி வளைத்தல் என்பது*

அ) உழிஞை ஆ) வஞ்சி இ) காஞ்சி ஈ) வாகை

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக :** 3

*i. தொகாநிலைத் தொடர் -------------- வகைப்படும்.*

அ) ஐந்து ஆ) ஒன்பது இ) எட்டு ஈ) மூன்று

*ii. 'கத்துங் குயிலோசை' என்பது ----------- வழுவமைதியாகும்.*

அ) திணை ஆ) பால் இ) மரபு ஈ) காலம்

*iii. வெற்றிபெற்ற மன்னன் ----------- பூச்சூடி மகிழ்வான்.*

அ) வெட்சிப்பூ ஆ) காஞ்சிப்பூ இ) வாகைப்பூ ஈ) தும்பைப்பூ

**இ) கூறியவாறு செய்க :** 3

*i. பஞ்சுரப்பண் (திணையைக் கூறுக)*

அ) பாலை ஆ) நெய்தல் இ) மருதம் ஈ) குறிஞ்சி

*ii. முல்லை (காலம் கூறுக)*

அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) இளவேனிற்காலம்
ஈ) முன்பனிக்காலம்

*iii. மலர் (உவமைத் தொகையாக்கு)*

அ) செம்மலர் ஆ) மலர்க்கை இ) கருமலர் ஈ) பூக்கும் மலர்

**ஈ) இலக்கணக் குறிப்புத் தருக :** 3

*i. தடக்கை என்பது*

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல்
ஈ) உரிச்சொல்

ii. *அசைஇ என்பது*

அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

iii. *நொந்தேன் நொந்தேன்*

அ) ஒன்றொழிப் பொதுச்சொல் ஆ) இனங்குறித்தல்
இ) வெளிப்படை ஈ) அடுக்குத் தொடர்

**உ) சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க : 3**

i. அ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வருவது எழுத்து.
ஆ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வருவது சொல்.
இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வருவது பொருள்.
ஈ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வருவது யாப்பு.

ii. அ) நிரல்நிறைப் பொருள்கோள் இரண்டு வகைப்படும்.
ஆ) நிரல்நிறைப் பொருள்கோள் மூன்று வகைப்படும்.
இ) நிரல்நிறைப் பொருள்கோள் நான்கு வகைப்படும்.
ஈ) நிரல்நிறைப் பொருள்கோள் ஐந்து வகைப்படும்.

iii. அ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை வைகறை.
ஆ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை எற்பாடு.
இ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை மாலை.
ஈ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை யாமம்.

## பிரிவு - ஈ

## இலக்கியம்/ உரைநடை - மதிப்பெண் : 36

**6. பின்வரும் பத்தியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய சரியான விடையை எழுதவும் : 5**

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் இராமலிங்கர் பிறந்தார்; தருமமிகு சென்னையிலுள்ள கந்தக் கோட்டத்து இறைவனாம் முருகனைப் பற்றி மனமுருகப் பாடிய நூல் தெய்வ மணி மாலை. திருவொற்றியூர்ச் சிவபெருமான் மீது பாடிய நூல் எழுத்தறியும் பெருமான் மாலை. வள்ளலார், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர் வாடத் தாம் வாடினார். பசிப்பிணியால் உயிர் இளைத்தோரைக் கண்டு வருந்தினார். வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கு உணவிட்டார். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார்.

**வினாக்கள் :**

i. வள்ளலார் பிறந்த ஊர் எது ?
ii. கந்தக் கோட்டத்து இறைவன் யார் ?
iii. சாதி மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவளித்த சாலை எது ?
iv. இராமலிங்கரின் வழிபாட்டு முறையைக் கூறு ?
v. வடலூரில் நிறுவப்பட்ட சபை எது ?

**7. பின்வரும் செய்யுள் வரிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளி : 4**

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய"*

**விடையளி :**

*i. இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன ?*

அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு

இ) மருதப்பாட்டு ஈ) பாலைப்பாட்டு

*ii. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார் ?*

அ) உமறுப் புலவர் ஆ) நக்கீரனார் இ) நப்பூதனார்

ஈ) மருதனார்

*iii. சுவல் - பொருள் தருக.*

அ) தோள் ஆ) தோல் இ) கரம் ஈ) சிரம்

*iv. உறுதுயர் - இலக்கணக் குறிப்புத் தருக.*

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**8. பின்வரும் குறட்பாக்களில் விடுபட்ட சொற்களை நிரப்புக : 4x1/2=2**

i. நாள்தொறும் ----------- முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு -----------.

ii. ---------------- இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் --------------- உலகு.

**9. ஏதேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு மட்டும் விடையளி : 8**

i. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

ii. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

iii. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

iv. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

**10. ஏதேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு மட்டும் விடையளி : 10**

i. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

ii. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

iii. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.

iv. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.

இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

v. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

**11. ஏதேனும் ஒரு துணைப்பாடப் பகுதிக்கு விரிவாக விடையளி : 7**

i. புயலிலே ஒரு தோணி

ii. பாய்ச்சல்

iii. கோபல்லபுரத்து மக்கள்

♫♫♫♫♫♫♫ ☺ ♫♫♫♫♫♫♫